இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 122 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 26 – புதன்கிழமை 11 டிசம்பர் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 122 : Thiruvalluvar Year - 2055 - Karthigai 26 - Wednesday 11 December 2024 - Chennai 16 Pages ₹ 5.00


### டாக்டர் உ.வே.சா. பிறந்த நாள்:

# தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2024) சட்டமன்றப் பேரவையில் வினாக்கள் – விடைகள் நேரத்தில், டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களின் பிறந்தநாள், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்தார்.

**சென்னை, டிச. 11 –**

**“டாக்டர் உ.வே.சா. பிறந்த நாள் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் நேற்று அறிவித்தார்.**

அ.தி.மு.க. உறுப்பினர் கே.பி. முனுசாமி கேள்விக்கு அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அளித்த பதில் வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகள், அதேபோல, தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களுடைய தமிழ் பணிகள் குறித்தும் இங்கே மிக விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்று; அதைத் துறையின் சார்பில் ஏற்றுக்கொள்கின்றோம். இருந்தாலும், அவருடைய பிறந்த நாளை இலக்கிய மறுமலர்ச்சி நாளாக அறிவிக்கப்படுமா என்று கோரியிருக்கின்றார்கள். ஏற்கெனவே, அதுசம்பந்தமாக உறுப்பினர் அவர்கள் அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, வருங்காலத்தில் அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

ஆண்டுதோறும் அவருக்கு மாநில விழாவாக, அரசு விழாவாக, அவருடைய பிறந்த நாளை நாம் கடைப்பிடித்து வருகின்றோம். சென்னை, கடற்கரை சாலையிலுள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கிறோம். உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அவருடைய பெயரிலே தமிழ்ப் புலவர்களுக்கு விருது வழங்குகிறோம். அதேபோல, அவருடைய பிறந்த ஊரான உத்தமனாதபுரத்தில் உள்ள அவருடைய வீடு இன்றைக்கு சிறப்பாக அரசின் சார்பில் பராமரிக்கப்படுகிறது. தொடர்ந்து உறுப்பினர் அவர்கள் பல்வேறு தகவல்களை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அவை முழுவதும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துகள்தான். நம்முடைய முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, எதிர்காலத்தில் இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.



**அப்போது முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு வெளியிட்ட அறிவிப்பு வருமாறு :-**

உறுப்பினர் கே.பி.முனுசாமி அவர்கள் இங்கே ஒரு கோரிக்கையை வைத்து, அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களும் அதற்கு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் பிறந்தநாளை தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாட வேண்டுமென்று அவர் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவருடைய கோரிக்கையை ஏற்று, நிச்சயமாக வரக்கூடிய காலக்கட்டங்களில் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் பிறந்தநாள், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், இன்று நம்முடைய துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்களின் பிறந்த நாளையொட்டி, அவருக்கு பிறந்த நாள் வாழ்த்துகளை உங்கள் அனைவரின் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

### யாரிடம் அனுமதி வாங்குவது என்று தெரியாமலேயே

## செம்பரம்பாக்கம் ஏரியை அ.தி.மு.க. அரசு நள்ளிரவில் திறந்து விட்டது!

### பேரவையில் சாத்தனூர் அணை திறப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்!

**சென்னை, டிச. 11 –**

**“யாரிடம் அனுமதி வாங்குவது என்று தெரியாமலேயே செம்பரம்பாக்கம் ஏரியை அ.தி.மு.க. அரசு நள்ளிரவில் திறந்து விட்டது” என்று முதல்வர் மு,.க.ஸ்டாலின் அவர்கள் அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு பதிலளித்தார்.**

சட்டப்பேரவையில் நேற்று சாத்தனூர் அணை திறந்து விடப்பட்டது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் கழக அரசு மீது விமர்சித்து பேசினர்.

அப்போது முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டுப் பேசியதாவது:-

செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்துவிட்ட காரணத்தால் மட்டுமல்ல; செம்பரம்பாக்கம் ஏரியை சொல்லாமல் திறந்துவிட்ட காரணத்தால்தான் பாதிப்பு ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையே மூழ்கியது. ஏறக்குறைய 250 பேருக்குமேல் இறந்துபோயிருக்கிறார்கள். ஆனால், சாத்தனூர் அணையைப் பொறுத்தவரையில் 5 முறை வார்னிங் கொடுத்து, எச்சரிக்கை விடுக்கப்பட்டு, அதற்குப் பிறகுதான் படிப்படியாகத் திறந்து விடப்பட்டிருக்கிறது. அதனால்தான் உயிரிழப்பின் எண்ணிக்கை 5, 6 என்ற அளவில் மட்டுமே ஏற்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை. எனவே இது வெட்டவெளிச்சமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்திய கணக்காய்வுத் துறையினர் ஆய்வு செய்து, தங்களது அறிக்கையில்கூட தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். செம்பரம்பாக்கம் ஏரியைத் திறக்கும் போது, அரசு யாருக்கும் சொல்லாமல் திறந்து விட்டது என்று அவர்களும் தெளிவாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்?

**எடப்பாடி கே. பழனிசாமி:** அடையாறு ஆற்றில் ஒரு இலட்சம் கனஅடி தண்ணீர் தடையில்லாமல் சென்று கடலில் கலக்கலாம். அப்படியெல்லாம் செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்த வெறும் 29 ஆயிரம் கனஅடிதான் தண்ணீர் திறக்க முடியும். அது எப்படி பாதிக்கும். 29 ஆயிரம் செம்பரம்பாக்கம் ஏரி. . . (குறுக்கீடு)

**முதல்வர் மு.க. ஸ்டாலின்:** நான் சொன்னதை அவர் புரிந்து கொள்ள வில்லை. சொல்லாமல், யாருக்கும் தெரிவிக்காமல் திறந்து விட்டார்கள். அதற்குக் காரணம்

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### அதானியைச் சந்தித்ததாக

# பா.ம.க. சொல்வது முழுப் பொய்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

**சென்னை, டிச. 11 –**

**“அதானியை நான் சந்தித்ததாக பா.ம.க. சொல்வது முழுப் பொய்” என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்.**

சட்டமன்றப் பேரவையில், நேரமில்லா நேரத்தில் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள், அதானி குறித்து எழுப்பிய பிரச்சினைக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு அளித்த பதில் வருமாறு:-

உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள், இந்த அவையிலே மட்டுமல்ல; அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள், அவருடைய கட்சித் தலைவர்கள் வெளியேயும் இதுபற்றித் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் வெளியில் பேசிக் கொண்டிருக்கிற அனைத்தையும் இவர் இந்த அவையில் பதிவு செய்யவில்லை. அதானியோடு முதலமைச்சருக்குத் தொடர்பு இருக்கிறது; அதானி அவர்கள், முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து விட்டுச் சென்றார் என்றெல்லாம்கூடப் பேசியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் பேசுவார் என்றுதான் எதிர்பார்த்தேன்; ஆனால், அவர் பேசவில்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஒருவேளை, அவரை நான் சந்திக்கவில்லை என்ற உண்மை அவர்களுக்கும் தெரிந்துவிட்டது என்பதற்காகத்தான் இங்கு அதைப் பேசாமல் விட்டுவிட்டார் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மின் துறை அமைச்சர் தெளிவான விளக்கம்!**

தமிழ்நாட்டில் அதானி குழுமத்தின் தொழில் முதலீடுகள் குறித்து பொது வெளியில் வரும் தவறான புகார்களுக்கு நம்முடைய மின்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள் தெளிவான, விரிவான விளக்கத்தைத் தொடர்ந்து இரண்டு, மூன்று முறை சொல்லியிருக்கிறார். அதற்குப்பிறகும், தொடர்ந்து இதைப்பற்றிய செய்திகள் வந்துகொண்டுதான் இருக்கின்றன.

**அதானி என்னைச் சந்திக்கவுமில்லை அவரை நான் பார்க்கவுமில்லை!**

அதானிகுழுமத்தினுடையமுதலீடுகளை வைத்து தமிழ்நாடு அரசின் மீது களங்கம் கற்பிக்க நினைப்பவர்களுக்கு, நான் எழுப்பக்கூடிய கேள்வி என்னவென்று கேட்டால்,

அதானி மீது சொல்லப்பட்டிருக்கக்கூடிய குற்றச்சாட்டுகள் குறித்து பாராளுமன்ற கூட்டுக் குழுவின் விசாரணை அமைக்கப்பட வேண்டும்; அந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டுமென்று நாடாளுமன்றத்தில் இந்தியா கூட்டணிக் கட்சிகள் முழக்கம் எழுப்பி வருகின்றன. தி.மு.க.வின் மீது குறை சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய பா.ஜ.க.வோ, பா.ம.க.வோ, இந்தக் கோரிக்கையை நாடாளுமன்றத்தில் ஆதரிக்கத் தயாராக இருக்கிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் நாடாளுமன்றத்தில் வைக்கக்கூடிய இந்தக் கோரிக்கையை ஆதரித்து நீங்கள் இதுகுறித்து விளக்கிப் பேசத் தயாராக இருக்கிறீர்களா என்ற கேள்வியை மாத்திரம் நான் இப்போது கேட்க விரும்புகிறேன்.

### நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணைக்கு பா.ஜ.க. தயாரா?

அவருக்கும், எங்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அவர் என்னை வந்து சந்திக்கவும் இல்லை. நான் அவரைப் பார்க்கவும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட வேறு விளக்கம் தேவையா? நான் கேட்கிற கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். இதுகுறித்து நாடாளுமன்றத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய எதிர்க்கட்சிகள் எல்லாம், ஆளுங்கட்சியைப் பார்த்து, பி.ஜே.பி. ஆட்சியைப் பார்த்து, இதற்கு விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை ஆதரித்துப் பேசுவதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? இதுதான் நான் உங்களிடம் எதிர்பார்க்கக்கூடிய விளக்கம்.

நீங்கள் ஆழமாகப் போக விரும்பவில்லை என்று சொன்னால், உங்கள் தலைவர்கள் இதில் ஆழமாகப் போய், இதை ஒரு அரசியலாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் இந்த விளக்கத்தை நான் இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதுவரையில் நான் பொறுமையாகத்தான் இருந்தேன். அதற்கு நான் விளக்கமே சொல்லவில்லை. சம்பந்தப்பட்ட துறை அமைச்சராக இருக்கக்கூடிய செந்தில் பாலாஜி அவர்கள்தான் அதற்குரிய விளக்கத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், இன்றைக்கு அவர் இங்கு இல்லை. அதனால்தான் நான் இங்கே எழுந்து, உங்களுக்கு இந்த விளக்கத்தைச் சொல்லியிருக்கிறேன். அப்படி விளக்கம் சொல்கிற நேரத்தில், நான் வைக்கிற கோரிக்கை; நீங்கள் ஆதரிக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் பா.ம.க.வும், பா.ஜ.க.வும் இருக்கிறது. எனவே, நீங்கள் ஆதரிக்க வேண்டும். அதற்கு நீங்கள் பதில் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதில் கூறினார்.